பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் (2-5-2012) புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-39 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

53. 11-7-2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம்-II, பிரிவு 1-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் 11(1)/வ.வ.ப./12(R-15)/2011 ஆம் எண் அறிவிக்கைக்கு மாற்றம் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு(பி2)த் துறையின் 31-10-2011 ஆம் நாளிட்ட 136 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

138. மானியக் கோரிக்கை எண் 8-பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2012-2013. (தமிழ், ஆங்கிலம்)

139. மானியக் கோரிக்கை எண் 6-கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2012-2013. (தமிழ், ஆங்கிலம்)

140. கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 2012-2013. (தமிழ், ஆங்கிலம்)

141. கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய மக்கள் சாசனம், 2012-2013. (தமிழ், ஆங்கிலம்)